**(2024-25-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 3 )

**SUBJECT CODE 24 PTM 415**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் நேரம் : 3 மணி

# தொல்காப்பியம் – பொருளதிகாரம் II

## பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. தறுகண் என்பது _______ க்குரிய மெய்ப்பாடு

அ) வெகுளி ஆ) பெருமிதம் இ) உவகை ஈ) மறுபகை

2. வேம்பு போலக் கைக்கும் __________ அறியப்பட்டது

அ) உடலால் ஆ) மூக்கால் இ) செவியால் ஈ) நாக்கால்

3. செய்யுளியலில் இருக்கும் உறுப்புகள் ________

அ) 34 ஆ) 36 இ) 30 ஈ) 32

4. தொல்காப்பியர் கூறும் வண்ணம் _______

அ) 20 ஆ) 25 இ) 15 ஈ) 30

5. கோடுவாழ் என்பது ________ க்குரியது

அ) குரங்கு ஆ) நரி இ) கீரி ஈ) ஒட்டகம்

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. மெய்ப்பாட்டியல் கூறும் வியப்பென்பது யாது?

7. மாரியன்ன வண்கை இது எவ்வகை உவமை?

8. பொழிப்பு எதுகைக்குரிய சீர்கள் எவை?

9. யாப்பின் மேலது தோன்றுவது எது?

10. குஞ்சரம் என்பது _____________ க்கு பொருந்தும் இளமைப் பெயர்

## பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ) "பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல் ஈரமில கூற்றம்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

(அல்லது)

ஆ) அகத்திணை, புறத்திணை மெய்ப்பாடுகளில் குறிப்பினால் தலைவிக்கு உணர்த்தும் அகத்திணை மெய்ப்பாடுகளை விளக்குக

(த.பி.பா.)

12. அ) "பெருமையும் சிறுமையுஞ் சிறப்பின் தீராக் குறிப்பின் வரூஉ" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

(அல்லது)

ஆ) உவமப்போலி ஐந்திணைச் சான்றுடன் எழுதுக

13. அ) அடி வகைகளைத் தக்க சான்றுடன் பொருத்திக் காட்டுக

(அல்லது)

ஆ) "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" - சீர் பிரித்து எழுதுக

14. அ) தொல்காப்பியர் கூறும் மக்களல்லாத பொருள்களுக்குரிய பதினொன்று கூறுகள் யாவை?

(அல்லது)

ஆ) பரிபாடலின் உறுப்புகள் யாவை? விளக்குக

15. அ) ஆண்பால் பெயருக்குரிய மரபியல் பெயர்களை வரிசைப்படுத்தி எழுதுக

(அல்லது)

ஆ) பெண்பால் பெயருக்குரிய மரபியல் பெயர்களை வரிசைப்படுத்தி எழுதுக

**பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) தொல்காப்பியர் இயற்றிய எண்வகை மெய்ப்பாடுகளின் வகைகளை விவரிக்க

(அல்லது)

ஆ) நடுவண் திணைக்குரிய மெய்ப்பாடுகள் யாவை? விவரிக்க

17. அ) உவம உருபுகளைப் பட்டியலிட்டு விளக்குக

(அல்லது)

ஆ) தொல்காப்பியர் கூறும் செய்யுளின் உறுப்புகளை வரிசைப்படுத்தி எழுதுக

18. அ) தளையின் வகைகளைத் தகுந்த எடுத்துக்காட்டுடன் **இயம்புக.**

(அல்லது)

ஆ) தொல்காப்பியர் மொழிந்த வெண்பாவின் வகைகளை விவரி

19. அ) செய்யுளியல் கூறும் வண்ணங்களின் வகைகளை **விளக்கி எழுதுக.**

(அல்லது)

ஆ) கலிப்பா**விற்குரிய** க்குரிய உறுப்புகளை எடுத்துக்காட்டுடன் விவரிக்க

20. அ) தொல்காப்பியர் கூறும் உயிரினப் பாகுபாட்டைத் தக்க சான்றுடன் பொருத்திக் காட்டுக

(அல்லது)

ஆ) தொல்காப்பியர் கூறும் முப்பத்திரண்டு உத்திகளை வரிசைப்படுத்தி எழுதுக

***********************